# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.1396/2021

DEPOSITION OF WITNESS FOR PW-2

NAME : திரு.பெருமாள்.

Father/ Husband NAME : திரு.சித்திரைவேல்

VILLAGE : முதலியார்புரம்

TALUK : தூத்துக்குடி

CALLING : மனுதாரர் தரப்பு சாட்சி

AGE : 58

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of June 2025.

<u>முதல் விசாரணை</u> :–

நான் இவ்வழக்கில் 3ம் நபர். என்னுடைய சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் சா.சா.ஆ.1. ஆகும்.

<u>2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை சாட்சியம் அளிக்க நான் இறந்துபோனவரின் உறவினர் என்பதால் வழக்கறிஞர்சொல்லி சாட்சியம் அளிக்க வந்தேன். நான் விபத்து சம்மந்தமாக புகார் எதுவும்

கொடுத்தேனா என்றால் இல்லை. இறந்துபோன ஆறுமுகத்தின் அண்ணன் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. இறந்துபோன ஆறுமுகம் சென்ற வாகனத்தை மணியரசன் என்பவர் ஓட்டிச்சென்றார். மணியரசன் தற்போது தூத்துக்குடியில் உள்ளார். அவர் தான் இறந்துபோன ஆறுமுகத்தின் உடன்பிறந்த அண்ணன் என்று சொன்னால் சரிதான். அவரை விசாரித்தால் விபத்து எப்படி நடந்தது என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். எனக்கு விபத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றும் நான் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் உண்மையவை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.